எம்.சி.ஓபி.எண் : 6902/18 and 7710/18 தேதி: 12/02/2025

மசா : 1

பெயர் : ராஜகுமார்

த/பெயர் : ராஜகோபால்

வயது : 36

**<u>மனுதாரர் தரப்பில் மசா ஆ1ன் முதல் விசாரணை</u>**

நான் 6902/18 ல் 3ம் மனுதாரர். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சான்று ஆவணங்கள் மசா ஆ1 முதல் மசா ஆ22 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து நடந்த தேதியானது 1.10.2018 ஆகும். இந்த விபத்தின் போது யார் வண்டி ஒட்டிச் சென்றார் என்றால் நான் யார் ஒட்டினார் என்று பார்க்கவில்லை. விபத்து நடப்பதற்கு முன்பே 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வண்டியை 1ம் எதிர்மனுதாரருக்கு விற்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது. விபத்து நடந்த அன்று 2ம் எதிர்மனுதாரர் பெயரில் இருந்த காப்பீடானது 1/3/2018 ல் முடிவடைந்து 6/4/2018 ல் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் புதுப்பிக்கபட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தின் போது 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வண்டியின் உரிமையாளர் அல்ல என்பதால் 1ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் 2ம் எதிர்னுதாரர் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடை அஜாகரதியால் இந்த விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த விபத்தில் இறந்தவர் எனது தாயார் என்றால் சரிதான். விபத்தின் போது எனது தம்பி ராஜசேகருக்கு திருமணம் ஆகவில்லை மற்றவர்களுக்கு திருமணாகி இருந்தது. தற்பொழுது எங்கள் 4 பேருக்கும் திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். நாங்கள் தனித்தனியாக

தான் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல, கூட்டாக தான் வசித்து வருகிறோம். நாங்கள் ஒன்றாக தான் வசித்து வருகிறோம் என்பதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எங்களது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களான ஆதார் கார்டுகள் வெவ்வேறு விலாசங்களில் தான் உள்ளது என்றாலும் நாங்கள் 4 பேரும் எங்களது தாயாரை சார்ந்த நிலை இல்லை என்றாலும் சரியல்ல. எனது தாயாருடைய வேலை மற்றும் சம்பள பற்றி ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள நஷ்ட ஈடு தொகையானது அதிகம் என்றாலும் எனது மனுவிலும் சத்திய பிரமான வாக்குமூலத்திலும் தொகைகளை அதிகபடித்தி கோரியுள்ளது ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்று சொன்னால சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.